Board for Medium Industries.

*46 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a Board for Medium Industries in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இது போன்ற நடுத்தரத் தொழில்களுக்கென்று ஒரு வாரியம் அமைப்பதால் அதனைக் கொண்டு நடுத்தரத் தொழில்களுக்கு இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவியாக இருக்கும். அரசாங்கம் அதற்கான திட்டத்தைப் பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொழில் வளர்ச்சிக்குப் பல குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு ஒரு குழு இருக்கிறது. மாநிலம் முழுவதிற்கும் பெரிய தொழில்கள் வளர்ச்சிக்கு ஸ்டேட் அட்வைசரி போர்டு இருக்கிறது. மீடியம் ஸ்கேல் என்று கேள்வியில் இருந்த காரணத்தினால், இல்லை என்று சொன்னேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ரசாயன உரத்தொழிற்சாலை

*47 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ரசாயன உரத்தொழிற்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கு ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை விவசாய மாவட்டமாக இருப்பதால் அங்கு ஒரு உரத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு இனியாகிலும் அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உரம் எங்கு உற்பத்தி செய்தாலும் தஞ்சைக்குத் தான் அனுப்பப்படுகிறது.

திரு. ஆர். கருப்பையா: குறிப்பாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக ரசாயன உரத்தின் விலை மேலும் ஏறிக்கொண்டு போகிறது. நாம் கோளாவிலிருந்து வருகிற லைபாக்ட் என்ற